इंडियन बैंक
Indian Bank
உங்கள் தொழில் நுட்பநேய வங்கி

7வது வருடாந்திர பொதுக்குழுவில் ஆற்றிய உரை




## T M பசீன்

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

நாள் : ஜூன் 28, 2013 நேரம்: காலை 10 மணி

இடம் : இமேஜ் ஆடிடோரியம்

இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

# தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அவர்களின் உரை

அன்பான பங்குதாரர்களே,

இந்தியன் வங்கி இயக்குனர் குழு சார்பாகவும், என் சார்பாகவும் இந்தியன் வங்கியின் ஏழாவது ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

மாட்சிமை மிக்க இக்கூட்டத்தில், உங்கள் வங்கியின் மார்ச் 31, 2013-ல் நிறைவான செயல்பாட்டை உங்கள் முன் வைப்பது எனக்கு வெகுவான மகிழ்ச்சி அளிக்கின்றது. மார்ச் 31, 2013-ல் நிறைவான வங்கி செயல்பாட்டுக்கான இயக்குனர் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கை உங்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கின்றது. உங்கள் ஒப்புதலுடன், அதை வாசிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்கிறேன்.

உங்கள் வங்கி பல முக்கிய அம்சங்களில் வெகு சிறப்பாக தொடர்ந்து செயல்படுகின்றது என்பதை தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். சொத்தின் மீதான ஆதாயம் (RoA) மற்றும் வர்த்தகத்தில் நிகர இலாப அம்சத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் உங்கள் வங்கி இரண்டாவது இடத்தில் உள்ளது. வர்த்தகத்தின் செயல்பாட்டு இலாபத்தில் உங்கள் வங்கி நான்காவது இடத்தில் உள்ளது.

உங்கள் வங்கியின் மூலதனத்தின் இடர் மதிப்புறு சொத்து விகிதம் (Capital to Risk Assets Ratio) நேர்த்தியான அளவிலாக 13.08% என்ற நிலைமையிலும் தேசிய வங்கிகளில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. உங்கள் வங்கியின் நிகர மதிப்பு, பங்கின் புத்தக மதிப்பை மார்ச் 31, 2013 அன்று ₹ 214.94 லிருந்து ₹ 242.89 ஆக உயர்த்தியுள்ளது.

இவையல்லாது, ஸ்டான்டர்டு & புவர் மற்றும் ஃபிட்ச் நிறுவனங்கள் இந்திய நாட்டுக்கு வழங்கிய உறுதித்தரத்தை, உங்கள் வங்கிக்கு வழங்கியுள்ளது.

கனவான்களே,பெருமாட்டிகளே, உங்களது வங்கியின் 2012-13 க்கான வங்கியின் செயல்பாட்டு விவரங்களை உங்கள் முன்வைப்பதற்கு முன்னர், வெகுசமீபத்திய உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமை மற்றும் அவற்றினால் வங்கி செயல்பாடுகளின் மீது ஏற்பட்டுள்ள தாக்கத்தைப் பற்றியும் ஒரு சுருக்கமான பின்னணியை உங்களுக்கு தர விரும்புகிறேன்.

**உலகளாவிய பொருளாதார நிலைமை**

உலகளாவிய வளர்ச்சி 2012-ல் வலுவற்றதாக இருந்தது. அது 2013–லும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. யூரோ பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற கொள்கை மாற்றங்கள் மற்றும் நிதி நெருக்கடியை சமாளிக்க ஐக்கிய அமெரிக்க நாடுகள் மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகள் ஓரளவு சரிவை கட்டுப்படுத்துகின்றனவே தவிர, இடர்கள் என்பது தொடர்ந்து இருந்த வண்ணமாகவே உள்ளன என்பதுதான் நிதர்சன உண்மை. முன்னேறியுள்ள பொருளாதாரங்கள் மேற்கொள்ளும் நிதி நிலை சீர்திருத்தங்களின் தாக்கமானது, வளரும் சந்தை பொருளாதாரங்களின் (EME) வளர்ச்சியை பின்னடைவு செய்வதினால் 2013க்கான செயல்பாட்டு நிலைகள் வலுவற்ற நிலையில் இருக்கும் என்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் முன்னேறியுள்ள பொருளாதாரங்களின் வெளித் தேவையில் தொய்வு, EMEக்களின் வளர்ச்சியின் மீது எதிர்மறையான தாக்கத்தை அளித்திருக்கின்றது.

உலகளாவிய வளர்ச்சியானது, 2013-ல் 3.3 சதவிகித மந்த நிலையில் தொடரும் என்றும் இது 2014-ல் 4.0 சதவிகிதத்துக்கு உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**இந்திய பொருளாதார நிலைமை**

வளர்ச்சி பின்னடைவு மற்றும் தொடர்ச்சியான பணவீக்கம் என்ற இரட்டை பற்றாக்குறைகள் 2012-13–ல் வெகுவாக அச்சுறுத்தி, வளர்ச்சி பின்னடைவானது பல துறைகளில் தெளிவாக புலப்படச் செய்கின்றது. வளர்ச்சி பின்னடைவுக்கான காரணிகளில், குறிப்பாக உற்பத்தித் துறை அடங்கியதாக சில வலுவற்ற வெளிப்புறத் தேவையின் தாக்கத்தினாலான நடவடிக்கை நிலைகளாகின்றன எனலாம். நமது பொருளதாரத்தின் வளர்ச்சிக்கு, முன்னணி காரணமாக இருந்து கொண்டிருந்த சேவைத்துறையிலும், சமீபமாக ஏற்பட்டிருக்கின்ற சரிவானது, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை பின்னுக்கு தள்ளிவிட்டது என்பது துரதிருஷ்டவசமானது.

தொழில்துறையில் உள்கட்டமைப்பு மற்றும் உள்ளீட்டு தடைகள், அதிகரிக்கும் விலைவாசிகள் மற்றும் மந்தமான வெளித்தேவை ஆகியவை, வளர்ச்சி சதவிகித்தை 2012-13 நிதியாண்டில் குறைந்த அளவிலான 1.0 சதவிகிதம் என்ற விதமாக பதிவாகியுள்ளது. மூலதனப் பொருட்கள் மற்றும் சுரங்கத் துறையின் முடக்கமானது, தொழில்துறையின் ஒட்டுமொத்த செயல்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பணவீக்கம் வருட இறுதியில் சற்று குறைந்து காணப்படினும், மொத்த-விலை குறியீட்டு எண் (WPI), 4.89 சதவிகிதம் என்றவாறு ஏப்ரல் 2013-ல் கடந்த 41 மாத ஒப்பீட்டில் குறைவாக காணப்படினும், நுகர்வோர்-விலை குறியீட்டு எண் (CPI) அதே காலகட்டத்தில் அதிகளவாக 9.39 சதவிகிதத்தில் இருப்பது, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்ற அழுத்தங்களை பிரதிபலிக்கின்றது.

இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சி 2012-13–ல் வெளிப்புறத் தேவையின் சரிவால் குறிப்பிடத்தக்க அளவுக்கு வீழ்ச்சியைக் கண்டுள்ளது. ஏற்றுமதியின் 1.8 சதவிகிதம் சரிவாலும், இறக்குமதியின் 0.4 சதவிதம் உயர்வாலும் ஏற்றுமதி-இறக்குமதி இடையேயான வேறுபாடு அதிகரித்திருக்கின்றது.


2011-12 GDP ல், ஏற்கனவே கூடுதலாக 4.1 சதவிகிதமாக இருந்த நடப்பு கணக்கு பற்றாக்குறை (CAD), நடப்பு ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் அபரிமிதமாக 5.4 சதவிகிதமாக உயர்ந்து நடப்பு கணக்கு பற்றாக்குறைக்கு (CAD) தொடர்ந்து அழுத்தம் கொடுப்பது மிகவும் வேதனைக்குரியது. CAD ஒப்பீட்டு GDP விகிதமானது, 2012-13 Q3 காலாண்டில் 6.7 சதவிகிதம் என்ற நிலையில், வரலாறு காணாத நிலையை அடைந்திருக்கின்றது. வீழ்ச்சி கண்டிருக்கும் ஏற்றுமதி, வலுவிழந்த ரூபாய் மதிப்பு மற்றும் மூலதன உள்ளீடுகளில் நம்பகமற்றத்தன்மை ஆகிய அம்சங்கள் வெளி கடன் மற்றும் நலிவுறு நிலை ஆகியவை மீது வெகுவான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

2012-13 நிதியாண்டில் பொருளாதாரச் சரிவின் தாக்கம், வங்கிகளின் டெப்பாசிட்டுகள் மற்றும் கடன்களில் வளர்ச்சியை கட்டுப்படுத்தியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி 2012-13 நிதியாண்டுக்கான கொள்கையில் நிர்ணயித்திருந்த டெப்பாசிட்டுகள் மற்றும் கடன்களுக்கான வளர்ச்சி குறியீடுகளான முறையே 15 சதவிகிதம் மற்றும் 16 சதவிகிதத்துக்கு, 14..3 மற்றும் 14.1 சதவிதமாகவும் பதிவாகியுள்ளது.

வளர்ச்சி சரிவை கருத்தில் கொண்டு, ரிசர்வ் வங்கி சட்டபூர்வ நீர்மை விகிதத்தை (SLR) 100 bps மற்றும் ரொக்க இருப்பு விகிதத்தை (CRR) 75 bps என்ற அளவில் 2012-13 நிதியாண்டில் குறைத்துள்ளது.

மேற்கண்ட பொருளாதார மற்றும் வங்கித்தொழில் பின்னணியில், உங்களது வங்கியின் 2012-13 நிதியாண்டுக்கான செயல்பாடுகளை உங்கள் முன் வைக்கின்றேன்.


**வர்த்தக மற்றும் நிதி நிலை சாதனைகள்**




உங்கள் வங்கியின் உலகளாவிய வர்த்தகம் 2012-13 நிதியாண்டில் 17.52 சதவிகித வளர்ச்சியை கண்டு ₹ 249,136 கோடியை அடைந்துள்ளது. டெப்பாசிட்டுகள் ₹ 21,176 கோடி வளர்ந்து அதாவது 17.53 சதவிகித வளர்ச்சியை கண்டு ₹ 141,980 கோடியை அடைந்துள்ளது. கடன்கள் ₹ 15,972 கோடி வளர்ந்து, அதாவது 17.52 சதவிகித வளர்ச்சியை கண்டு ₹ 107,156 கோடியை அடைந்துள்ளது.

ஒரு சிறப்பான இருப்புநிலை குறிப்பை தக்கவைக்க, செயல்படாத சொத்துக்கள் மற்றும் ஊழியர்கள் நல சலுகைகளுக்கும், தேவையான அளவு ஒதுக்கீடு செய்ததால், இலாபத்தை சற்று பாதித்துள்ளது.


உங்கள் வங்கியின் செயல்பாட்டு இலாபம் 2012-13 நிதியாண்டில் ₹ 3,061 கோடி என்பதாகவும், நிகர இலாபம் ₹ 1,581 கோடியாகவும் பதிவாகி உள்ளது.





கடந்த ஆண்டில் ₹ 1,114 இலட்சம் இருந்த பிரதி ஊழியர் வர்த்தகம், ₹ 1,301 இலட்சமாக உயர்ந்துள்ளது.

சொத்துக்களின் மீதான ஆதாயம் (RoA) பொதுத்துறை வங்கிகளில் சிறப்பான செயல்பாடு என கருதக்கூடிய 1.02 சதவிகிதம் என்ற நிலை தொடர்கின்றது.


நிகர வட்டி வரம்பு (NIM), தொடர்ந்து 3 சதவிகித நிலையை மிகுந்து, 3.09 சதவிகித அளவில் தக்கவைக்கப்பட்டிருக்கின்றது.




பிரதி பங்கு வருமானம் (வருடாந்திர) மற்றும் பிரதி-பங்கு புத்தக-மதிப்பு முறையே ₹35.80 மற்றும் ₹ 242.89 என்பதை பதிவு செய்துள்ளன.





நிகர-மதிப்பு மீதான-ஈடு (RoE) நடப்பு நிதியாண்டில் 14.89% ஆக உள்ளது. உங்கள் வங்கியின் மூலதனம் வலுவாக உள்ளது. உங்கள் வங்கியின் நிகரமதிப்பு ₹ 10,838.84 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும், BASEL II –ன் கீழ் மூலதன போதுமை விகிதம் 13.08 சதவிகிதமாக உள்ளது (வகை1/Tier I– 10.88%, வகை 2/Tier II – 2.20%).




அகில இந்திய அளவிலான நெட்வொர்க்கை மேம்படுத்த மற்றும் வங்கி சேவை குறைவாக மற்றும் வங்கி சேவை சேராத இடங்களிலும் சென்றடையும் விதத்தில், நடப்பு ஆண்டில் உங்கள் வங்கி 143 புதிய கிளைகளையும் 42 ஏடிஎம்களையும் துவங்கி, மொத்தமாக 2,089 கிளைகளையும் 1,322 ஏடிஎம்களையும் கொண்டுள்ளது.

உங்கள் வங்கி, சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் கொழும்பு மற்றும் ஜா∴ப்னாவிலும் தனது வங்கிச் சேவையை நீட்சி படுத்தியுள்ளது.




உங்கள் வங்கி, முன்னுரிமை துறைக்கான அனைத்து வரையறைகளை அடைந்து, சீர்செய்த நிகர வங்கி கடனில் 42.1 சதவிகிதமாக ₹ 36,421 கோடி விநியோகித்துள்ளது. விவசாயக் கடன் மார்ச் 31, 2013-ல் ₹ 3,646 கோடி அதிகரித்து ₹ 17,001 கோடி என்றளவில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சிறு-நடுத்தர நிறுவனத்துறையை (SME) மையப்படுத்தும் நோக்கத்துடன், உங்கள் வங்கி, நாடு முழுவதுமாக SME துறைக்கு தனிப்பட்ட சேவையளிக்கும் விதத்தில், 73 பிரத்தியேகமான கிளைகளை நிறுவி, இந்த துறைக்கு வழங்கும் கடன் மார்ச் 31, 2013-ல் 35 சதவிகிதம் அல்லது ₹ 3,588 கோடி அதிகரித்து ₹ 13,746 கோடி என்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அனைவருக்கும் வங்கிச் சேவை**

- சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்குவதில், பிரத்தியேகமாகச் செயல்படும் உங்கள் வங்கி 45 மைக்ரோசாட் கிளைகளை துவங்கியுள்ளது. இந்த கிளைகள் 2012-13 நிதியாண்டில், 23,457 சுய உதவிக்குழுக்களுக்கு ₹ 590 கோடியை விநியோகித்துள்ளது மேலும், மார்ச் 2013 வரை இறுதியில், மொத்த நிலுவையிலுள்ள கடன்கள் ₹ 746 கோடியாக 56,913 சுயஉதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.
- உங்கள் வங்கி, மக்கள்தொகை 2000 நபர்களுக்கு மேலான கிராமங்களுக்கு, 1,418 நுண்சிறு கிளைகள் (USBs), அனைவருக்கும் வங்கிச்சேவை திட்டத்தின்கீழ் வர்த்தக பிரதிநிதி (BC) அடிப்படையில் துவங்கப்பட்டிருக்கின்றன.
- அனைவருக்கும் வங்கிச்சேவை திட்டத்தின்கீழ், உங்கள் வங்கி மக்கள்தொகை 2000க்கும் குறைவாக அல்லது மிகுதியாக உள்ள கிராமங்களுக்கு, கீழ்க்கண்ட பல்வேறு தடங்கள் வாயிலாக, வங்கி சேவைகளை அளித்து வருகின்றது.
    - 3380 கிராமங்களுக்கு ஸ்மார்ட்கார்டு அடிப்படையில் வர்த்தக-பிரதிநிதி (BC) மாடல்
    - 26 கிராமங்களுக்கு கிளைகள்
    - 34 கிராமங்களுக்கு வங்கி சேவை மையங்கள்
    - 54 கிராமங்களுக்கு நடமாடும் கிளை/வாகனம்
- புதுச்சேரி ஒன்றிய பிரதேசத்தில், உங்கள் வங்கி மாநில வங்கியர்கள் குழு (SLBC) ஏற்பாட்டாளராக செயல்படுகின்றது. மக்கள்தொகை 2000 நபர்களுக்கு மேலுள்ள 42 கிராமங்கள், மக்கள்தொகை 2000 மற்றும் அதற்கு குறைவாக உள்ள 25 கிராமங்களுக்கு உறுப்பினர்-வங்கிகள் அனைவருக்கும் வங்கிச்சேவை திட்டத்தின் கீழ் பல்வேறு தடங்களின் வாயிலாக வங்கிச் சேவைகளை அளிக்கின்றது.

- நேரடி மானியத்தொகை திட்டத்தில் (DBT) செயல்படுத்தப்படும், 43 முன்னோடி மாவட்டங்களில் ஒன்றான சித்தூர் மாவட்டத்தில் உங்கள் வங்கி முன்னணி வங்கியாகவும், புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் SLBC ஏற்பாட்டாளராகவும் செயல்படுகின்றது. புதுச்சேரியில் 13 திட்டங்களின் கீழ், அனைத்து 4,249 பயனாளிகளுக்கும், சித்தூர் மாவட்டத்தில் 8 திட்டங்களின் கீழ், 1.29 இலட்சம் பயனாளிகளுக்கும் புதிய கணக்குகள் துவங்கப்பட்டுள்ளன. கிருஷ்ணா மற்றும் யானம் மாவட்டங்களில் முறையே 5 திட்டங்களின் கீழ் 1.07 இலட்சம் பயனாளிகளும் 3 திட்டங்களின் கீழ் 753 பயனாளிகளுக்குக்கான கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

**விருதுகளும் அங்கீகாரங்களும்**

நடப்பு ஆண்டிலும், உங்கள் வங்கியின் செயல்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டு, பல விருதுகளை பெற்றுள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்க சில :-

**நடப்பு நிதியாண்டில் சிறு-குறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் முன்னணி வங்கியாக செயல்பட்டதில், வங்கிகளில் முதலிடம் பெற்று, மேதகு இந்திய குடியரசுத் தலைவரால் தேசிய விருது வழங்கப்பட்டது.**

அனைவருக்கும் வங்கிச் சேவை திட்டத்தில் தொழில்நுட்பத்தை வெகு சிறப்பாக ஈடுபடுத்தியதற்காக, 'SKOCH Digital Inclusion Award 2012'

வங்கிச் சேவை சென்றடையாத கிராமங்களில், பல வகையில் அனைவருக்கும் வங்கிச் சேவை திட்டங்களின் மூலம் வங்கிச் சேவையை செயல்முறைப் படுத்தியதற்காக 'SKOCH Challenger Award 2012'

புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் 100% அனைவருக்கும் வங்கிச் சேவை - 'SKOCH Financial Inclusion Award 2012'

ஊழியர்கள் பயிற்சி மற்றும் ஈ-பயிற்சி (கணினி படுத்துதல்) ஆகியவற்றில் தொழில்நுட்பத்தின் சிறப்பான உபயோகத்திற்காக – 'IBA Banking Technology Award 2011'

சிறப்பான வங்கிக்காக – 'Outlook Money Award 2012'

'NFS ATM Operational Excellence Award 2012' – ஏடிஎம்கள் மற்றும் NFS ATM இணைப்புகளின் சிறப்பான செயல்பாட்டை அங்கீகரித்து, பொதுவுடமை வங்கிகள் வகைப்பாட்டில் இரண்டாம் இடம்.

துரிதமான வங்கிச் செயல்பாட்டு சேவைக்காக, த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மூலமாக 'The Sunday Standard FINWIZ Award 2012'

Master Card Innovation Award – மாஸ்டர்ஸ் கார்டு இன்டர்நேஷனல் மூலமாக பலவாறான ப்ரீபெய்டு மாஸ்டர் கார்டுகள் திட்டங்கள் அறிமுகப்படுத்தியற்காக.

**சமீபத்திய பாராட்டுக்கள்**

'பாங்கர்ஸ் மேகஜின்' (Bankers Magazine) படி சொத்தின் மீதான ஆதாயத்தின் படி (RoA) உலகளவில் முதல் 150 வங்கிகளில் ஒன்று

'எகனாமிக் டைம்ஸ் பிராண்டு ஈக்விடி' மூலமாக சிறப்பான சேவை பிராண்டு என்ற தரவரிசையில் பொதுவுடமை வங்கிகளில் ஐந்தாவது இடமளிப்பு

வங்கி தலைமை அலுவலக கட்டிடத்துக்கு ISO 9001:2008 தர சான்றிதழ் அளிக்கப்பட்டிருத்தல் - ISO சான்றிதழ் பெறும் முதல் பொதுவுடமை வங்கி கார்ப்பொரேட் அலுவலகம்

**புதிய முயற்சிகள்**

- MSME கடன்களுக்கு ஆன்லைன் விண்ணப்ப வசதி
- மேற்கு வங்காளத்தில் நேரடி வரி, மறைமுக வரி, வர்த்தக வரிகள் சேகரிப்பு, மகாராஷ்டிராவில் வங்கி மூலம் கருவூலக் கட்டணம் செலுத்துதல், புதுச்சேரி, கர்நாடகா, ஒரிஸ்ஸா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாட்டில CST/VAT, தமிழ்நாடு RTO கட்டணங்கள், தமிழ்நாடு மின்சார வாரிய கட்டணம், icegate வலைதளம் மூலமாக சுங்கவரி கட்டணம் செலுத்துதல், புதுதில்லி-தேசிய தலைநகரப் பிரதேசத்தில் மற்றும் வர்த்தக மற்றும் வரித் துறைகளுக்கான CST மற்றும் DVAT இரசீது அடங்கிய சேவைகள் அமலாக்கம்
- 5000-க்கு மேற்பட்ட வர்த்தகர்கள்/இடைத்தரகர்கள் மூலமாக ஆன்லைன் மொர்ச்சன்ட் பேமெண்ட் கேட்வே இன்டர்ஃபேஸ் ஆன்லைன் பில் கட்டணங்கள் அமலாக்கம்
- எஸ்எம்எஸ் தடம் மூலமாக, தமிழ்நாடு மின்சார வாரியம் கட்டணங்கள் செலுத்தப்படுதல்
- இணையதள வங்கிச்சேவை மூலமாக பிரதம மந்திரி தேசிய நிவாரண நிதிக்கான பங்களிப்பு அமலாக்கம்
- மாஸ்டர் கார்டு பிராண்டு மூலமாக, ஐபி ப்ரீபெய்டு கிஃப்டு கார்டுகள் மற்றும் ஐபி ப்ரீபெய்டு இன்டர்நேஷனல் டிராவல் கார்டு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ப்ரீபெய்டு கிஃப்டு கார்டுகள் தன்னிச்சையான மதிப்பம்சத்தில் வாடிக்கையாளர்களுக்கு சேவை கட்டணம் இல்லாமல் வழங்கப்படுகின்றது. ப்ரீபெய்டு டிராவல் கார்டுகள் வங்கியின் அந்நியச்செலாவணி அனுமதிக்கப்பட்டுள்ள வங்கிகளில் விற்கப்படுகின்றது.
- இணையதள வங்கிச் சேவை மூலமாக e-TDA (மின்னணு கால வைப்பு நிதி) துவங்குதல் -வாடிக்கையாளர்கள் தங்களது நெட் பாங்கிங் மூலமாக உடனடியாக தவணை வைப்புகளை (FD/STD/RIP/RD) துவங்கக்கூடிய மற்றும் பணம் செலுத்தக்கூடிய வசதி.
- UAE பரிமாற்ற குழுமம் மூலமாக நமது வாடிக்கையாளர்கள் கணக்குகளில் உடனடியாக வரவு வைப்பு.
- பல பயன் கட்டணம் செலுத்தும் முறை மூலமாக பல்வேறு பல்கலைக்கழகங்களின் விண்ணப்பக் கட்டணங்களின் சேகரிப்பு.

**எதிர்காலத்தை நோக்கி**

மிதமான வளர்ச்சியை கொண்ட நடப்பு நிதி ஆண்டு (2013-14) ஒரு சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். உலகளாவிய விதமாக, பொருளாதார நிலைமை தெளிவற்ற நிலையில் இருப்பதும், உள்நாட்டு பொருளாதாரமும் இரட்டை பற்றாக்குறைகளான தொடர் பணவீக்கம் மற்றும் மந்தமான மொத்த உற்பத்தி மதிப்பு (GDP) சரிவு நிலையில் இருப்பது, மொத்த உள்நாட்டு சேமிப்பு மற்றும் முதலீட்டு சூழலைக் குறைப்பதன் விளைவாக வங்கித் துறையின் வளர்ச்சி சற்று பாதிக்கக் கூடும்.

**நன்றி பாராட்டல்**

இந்தியன் வங்கி இயக்குனர் குழு சார்பாகவும், என்னுடைய சார்பாகவும், இந்திய அரசாங்கம், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) எங்களுக்கு அளித்து வருகின்ற வழிகாட்டுதல்களுக்கும் மற்றும் ஆதரவுக்காக, என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

எங்களுக்கு தொடர்ந்து நல் ஆதரவளித்து ஒத்துழைக்கும் அனைத்து நிதிநிறுவனங்கள் மற்றும் தொடர்பு வங்கிகளுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

வங்கி வாடிக்கையாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் அவர்களின் வரையற்ற ஆதரவிற்கும் எங்களின் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கும் நன்றி கூறுகின்றேன்.

இந்த இக்கட்டான நிதி நிலை காலகட்டங்களில், வங்கியின் ஒட்டுமொத்த வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சிறப்பான செயல்பாடுகளையே தங்களது குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற எங்களது அனைத்து பணியாளர்களுக்கும் இயக்குனர் குழு சார்பாகவும், என் சார்பாகவும் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

உங்கள் உண்மையுள்ள,

**டி எம் பசீன்**

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்